தினமலர்
உண்மையின் உரைகல்

ஏப்ரல் 20,2015 IST

உலக தமிழர் செய்திகள்

# சிங்கப்பூரில் கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னல்

அரசு ஆதரவோடு வளர் தமிழ் இயக்கம் நடத்தும் தமிழ் மொழி விழாவின் நிகழ்சிகள் ஒவ்வொரு நாளும் புதுப் பொலிவோடு தொடருகின்றன . அதில் ஒரு அங்கமாக , ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சிங்கப்பூர் கிளை ஏப்ரல் 18 ம் தேதி , உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் , கவிஞர் மேத்தாவின் "நட்சத்திர ஜன்னலில் " என்ற நிகழ்வினைச் சிறப்பாக நடத்தியது . "விழா எல்லா இடங்களிலும் நடை பெறுகின்றன . ஆனால் , தமிழ் மொழி - இன - சமூகம் விழாமல் இருக்க , ஒரு மாதம் முழுவதும் விழா எடுப்பது சிங்கப்பூரின் தனிச் சிறப்பு " என்றார் . அவர் மேலும் பேசுகையில் , நமக்கெல்லாம் தாய் நாடு உண்டு - ஆனால் அமரர் லீ குவான் இயூ .இந்த நாட்டிற்குத் தாயாக விளங்கினார் என்று குறிப்பிட்டார். தமது திரை உலக அனுபவங்களை விவரித்த அவர், பாரதி தாசன் , கண்ணதாசன் , பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்களையும் ஒப்பிட்டுப் பேசினார். வானம் சிங்கப்பூரைப் பார்க்க ஆசைப் பட்டது .ஜன்னலைத் திறக்கிறது - நட்சத்திர ஜன்னல்களைத் திறந்து கொண்டு நம்மைப் பார்க்கிறது . ஆகாயம் ஆச்சரியப் படுகிறது - வியக்கிறது - மலைக்கிறது -மகிழ்கிறது என சிங்கப்பூரைப் புகழ்ந்துரைத்த மேத்தா , செருப்புடன் பேட்டி என்ற தமது கவிதையுடன் உரையை நிறைவு செய்தார் .வாழ்க நிரந்தரம் , வாழ்க தமிழ் மொழி என்ற சினேகா முரளியின் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் விழா தொடங்கியது . சங்கத்தின் தலைவர் , பட்டயக் கணக்காய்வாளர் மு . அ . காதர் தலைமை வகித்தார் .சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட , நாடாளு மன்ற நியமன உறுப்பினர் கி.கார்த்திகேயன் , பாவேந்தரின் , தமிழுக்கு அமுதென்று பேர் என்ற பாடலை இசையோடு பாடி அசத்தினார் . முத்தாய்ப்பு நிகழ்வாக ஜமாலியன் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது . சிங்கப்பூரின் கலாசார விருது பெற்ற மூத்த கவிஞர் க . து . மு. இக்பால் , பத்திரிகையாளர் ஜே . எம் . சாலி , சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் நா. ஆண்டியப்பன் , சிறு கதை எழுத்தாளர் ஷா நவாஸ் , கடைய நல்லூர் முஸ்லீம் சங்கத் தலைவர் மு. ஆ . மசூது ஆகியோருக்கு சிறப்பு விருந்தினர் கார்த்திகேயன் விருது வழங்கி கௌரவித்தார் .கவிஞர் மு. அ. காதர் எழுதிய " நம் அன்னைத் தமிழ் வாழ்ந்திடவே ஒன்று கூடுவொம் என்ற பாடலை மு. அ. ஜெய்னுல் ஆபிதீன் பைஜி கம்பீரக் குரலில் பாடி மகிழ்வித்தார். தமிழை நேசிப்போம் - தமிழில் பேசுவோம் என்ற வரிகளை பார்வையாளர்கள் உள்ளிட்ட அனைவரும் சேர்ந்து பாடி அரங்கை அதிர வைத்தனர் .சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுக் கழகத் தலைவர் பரதன் கவிஞர் மேதாவுக்குப் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார் .மு. அப்துல் சுபஹான் நன்றி உரை நவின்றார் , முன்னதாக மறைந்த சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீயுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது. அ. பரீஜ் முகமது நிகழ்வினைச் சுவைபட நெறிப் படுத்தினார் .- *நமது செய்தியாளர் வி.புருஷோத்தமன்*




அடுத்து

சிங்கப்பூரில் கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னல்

முந்தைய
அடுத்து




சிங்கப்பூரில் கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னல்

முந்தைய
அடுத்து




சிங்கப்பூரில் கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னல்

முந்தைய




சிங்கப்பூரில் கவிஞர் மேத்தாவின் நட்சத்திர ஜன்னல்